உலகத்தமிழ்
உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை வழங்கும் மின்னிதழ்

# சொல்லதிகாரம் - சேனாவரையர் உரையும் வேற்றுமையியலும்

முனைவர் சே. கல்பனா
உதவிப்பேராசிரியர்
தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

தமிழில் வேற்றுமைகள் குறித்த சிந்தனை மரபு, தொல்காப்பியத்திற்கு முன்னிருந்துள்ளதைத் தொல்காப்பியமே சுட்டியிருந்தாலும், அவை நமக்கு கிடைக்கவில்லை. தொல்காப்பியச் சொல்லதிகாரத்தினுள் காணப்படும் 465 சூத்திரங்களில், 123 சூத்திரங்கள் வேற்றுமையைப் பற்றி பேசுபவையாகக் காணப்படுகின்றன. நான்கில் ஒரு பகுதி, அதாவது வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு எனப் பகுத்துக்கொண்டு தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார். வேற்றுமையின்றி மொழியாக்கம் சாத்தியமில்லை என்பதை உணர்ந்து, தொல்காப்பியர் செயல்பட்டுள்ளார் என்பதை, பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் “தமிழ் மொழியமைப்பில் வேற்றுமைக்கு ஒரு முக்கிய இடம் உண்டு என்று கூறுகிறார். இதனை நன்குணர்ந்தவர் தொல்காப்பியர். அதனால் தான் ஒன்பது இயல்களைக் கொண்ட தம்முடைய சொல்லதிகாரத்தில் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு” என வேற்றுமையைப் பற்றி மூன்று இயல்களைப் படைத்துள்ளார் (தமிழில் வேற்றுமைகள்; பக்.8) என்று கூறுகிறார்.

தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய நேமிநாதம், நன்னூல், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், முத்து வீரியம், ஏழாம் இலக்கணம், தமிழ்நூல், வீரசோழியம், பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து, குவலாயனந்தம் போன்ற நூல்கள் வேற்றுமையைக் குறித்துப் பேசியுள்ளன. இவற்றிற்கெல்லாம் அடிப்படையாகத் தொல்காப்பியம் விளங்குகின்றது. தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு இலக்கண நூல்கள் உருவான காலத்தே, உரைகளும் தோன்றியுள்ளன. தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடனார், பழைய உரையாசிரியர் போன்றோர் உரையெழுதியுள்ளனர். இவ்வுரை சேனாவரையர் வேற்றுமையியலுக்குத் தரும் உரைநுட்பம் குறித்த உரையாடலாக அமைகிறது.

## சேனாவரையர் உரை – உத்திகள்

தொல்காப்பியச் சொல்லதிகார சேனாவரையர் உரையைப் பதிப்பித்த டாக்டர் கு.சுந்தரமூர்த்தி சேனாவரையரின் உரை உத்திகளாக,

1. தாமே விடையெழுப்பி விடையிறுத்தல்
2. இலக்கிய நயம்பட உரைத்தல்

3. தருக்க நூற் புலமை
4. பண்டைய வழக்குகள்
5. இதனால் பயன் இதுவெனல்
6. நூற்பாக்களின் இன்றியமையாமை
7. சொற்கள், சொற்றொடர்களின் இன்றியமையாமை
8. நூற்பாக்களின் அமைப்பு விளக்கம்
9. முறை வைப்பு கூறல்
10. பாடபேதமும், நூற்பா அமைப்பும்
11. உவமை நலம்
12. சொற்பொருள் விரித்தல்
13. தாமே நூற்பாக்களைப் படைத்துக்கூறல்
14. எழுத்து, பொருள் அதிகாரங்களிலிருந்து நூற்பாக்களை எடுத்தாளுதல்
15. வடநூற் கலை நிலைகண்டுணர்ந்தமை
16. அணியிலக்கண உடன்பாடு
17. ஒன்றற்கு மேற்பட்ட உரை கூறல்
18. சேனாவரையர் பிற உரை எடுத்துக்காட்டல்
19. பிறர் கருத்தை மறுக்கும் நிலை
20. ஆசிரியர் கூற்றில் உறுதிப்பாடு உடைமை

எனப் பகுத்துக்காட்டுகிறார்.

### கிளவியாக்கம் அடுத்து வேற்றுமையியல் கூறக் காரணம்

கிளவியாக்கத்துள் நான்கு சொற்களுக்கும் பொதுவிலக்கணமுணர்த்தினார் ஆசிரியர். அடுத்துப் பெயரது சிறப்பிலக்கணத்தை இவ்வியலுள் உணர்த்தல் வேண்டும். அதனையுணர்த்தாது வேற்றுமை இலக்கணத்தை உணர்த்துவதற்குக் காரணம் மூன்றாகும்.

1. இவ்விடத்தில் வேற்றுமை இலக்கணம் உணர்த்தவில்லையெனின் வேறுயாண்டு முணர்த்துதற்கு இடனில்லாது போகின்றது.

2. வேற்றுமையாவது உருபும் உருபேற்ற பெயருமாதலின், இதுவும் கிளவியாக்கம் போன்ற பொதுவிலக்கணமாகவே உள்ளது. கிளவியாக்கம் நால்வகைச் சொற்களுக்கும் பொதுவிலக்கணம் கூறுகின்றது. வேற்றுமையுருபு, இடைச் சொல் ஆதலானும் அதனையேற்பது பெயராதனாலும்,இவ்வேற்றுமையியலும் பெயச்சொல், இடைச்சொல் ஆகிய இரண்டின் பொதுவிலக்கணமாகின்றது.

3. பெயரது இலக்கணங்களில் உருபேற்றலுமொன்று. அவ்வுருபின் இலக்கணத்தை முன்னர் ஏற்று வரும் என்று பின்னர்க் கூறின், முறையாகவும், தெளிவாகவும் இருக்கும் ஆதலின், கிளவியாக்கத்தின் பின் இவ்வியல் வைக்கப்பட்டதென்பது.

### வேற்றுமை பெயர்க் காரணம்

"வேறு" என்னும் குறிப்பு வினையடியாக பிறந்த 'மை' ஈற்று உடன்பாட்டுத் தொழிற்பெயரே என்பதாகும். மாற்றம் அல்லது வேறுபாடு என்பது பொருளாகும். பெயர்க்கு வினையோடு உள்ள உறவில் நேரும் மாற்றத்தை வேறுபாட்டைக் குறிக்க இச்சொல்லை வழங்கியது மிகவும் பொருத்தமே. பல்வேறு மொழிகளிலும் வேற்றுமையைக் குறிக்கும் இச்சொற்கள் இப்பொருளுடனேயே வழங்குகின்றன.

"பொருட்களை வேறுபடுத்தினமையாற் பெற்ற பெயர். என்னை வேறுபடுத்தியவாறு எனின், ஒரு பொருளை ஒருகால் வினை முதலாக்கியும், ஒருகால் செயற்படு பொருளாக்கியும், ஒருகால் கருவியாக்கியும், ஒருகால் ஏற்பது ஆக்கியும், ஒருகால் இடமாக்கியும் இவ்வாறு வேறுபடுத்தது என்க" என்பர் தெய்வச்சிலையார்.

### வேற்றுமை – வரையறை

தமிழிலக்கண வரலாற்றில் பதின்மூன்று இலக்கண நூல்கள் வேற்றுமையைப் பற்றி பேசுகின்றன. ஆயின் அவற்றுள் ஐந்து நூல்கள் தாம் வேற்றுமையை வரையறுக்க முயல்கின்றன.

1. நன்னூல்
2. இலக்கண விளக்கம்
3. தொன்னூல் விளக்கம்
4. சுவாமிநாதம்
5. தமிழ்நூல்

**"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈற்றாப்பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை" (நன்னூல், 291)**

**"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈற்றாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன ஏழென மொழிப
விளிகொள் வதன்கண் விளியலங் கடையே" (இலக்கிய விளக்கம், 193)**

**"வேற்றுமைப் படுதலின் வேற்றுமையாம்" (தொன்னூல் விளக்கம், 55)**

**"பெயரிய பொருளை வேற்றுமை செய்வது
எட்டு வேற்றுமையே" (சுவாமிநாதம், 40)**

**"பொருள் வேறாதல் வேற்றுமை" (தமிழ் நூல், 68)**

### வேற்றுமை எண்ணிக்கை

தொல்காப்பியருக்கு முன் ஏழு வேற்றுமை இருந்துள்ளதை, "வேற்றுமை தாமே ஏழென மொழிப" (தொல்.546) என்று கூறிய பிறகு, "விளிகொள் வதன்கண் விளியொடு எட்டே" (தொல்.547) என்று கூறுகிறார்.

கல்வெட்டில் தமிழை ஆராய்ந்த ஆய்வாளர் 11 வேற்றுமைகளைச் சுட்டுகிறார். மொழியியல் அறிஞர்கள் பல வேற்றுமைகள் பெருகியுள்ளதை எடுத்துக்காட்டியுள்ளனர்.

மூன்றாம் வேற்றுமைக்குரிய ஒடுவும் ஆனும் தனித்தனி வேற்றுமைகளாக வேண்டற்பாலன என்னும் கருத்து சேனாவரையர் காலத்தில் அரும்பி, கால்டுவெல் காலத்து அலர்வதைக் காணமுடிகிறது. நீங்கள் பொருள் வேற்றுமையும், இடப்பொருள் வேற்றுமையும் ஒன்றாக வேண்டற்பாலன என்றும் கால்டுவெல் கருதுகிறார்.

### வேற்றுமை பெயரீடு

1. உருபு அடிப்படையில் - ஐ, ஒடு, கு, இன், அது, கண்.
2. எண் அடிப்படையில் - எழுவாய், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு.
3. பொருள் அடிப்படையில் - செயப்படு பொருள்,உடனிகழ்வு,கொடைப்பொருள், நீங்கல் வேற்றுமை, உடமைப் பொருள், இடப்பொருள்.

### வேற்றுமையியல் பற்றிய கருத்துரைக்கையில்

வேற்றுமையியலை அடுத்து, ஏன்? கிளவியாக்கத்தை வைக்கவேண்டும் என்னும் வினாவினை எழுப்பிக்கொண்டு அதற்கு விடை பகர்வது போல் சேனாவரையர்.

- நான்கு சொற்களுக்கு இலக்கணம் உணர்த்தினார்.
- அதற்கு இடையீடின்றி அவற்றது சிறப்பிலக்கணம் உணர்த்துதன் முறைமையானும்,வேற்றுமையிலக்கணம் உணர்த்துவதற்கு வேறு இடம் இன்மையானும் பொதுவிலக்கணமாதல் ஒப்புமையானும், கிளவியாக்கத்தோடு தொடர்புடையது.
- உருபேற்றல் பெயருக்கு இலக்கணமாதலின் வேற்றுமையுணர்த்திப் பெயருணர்த்தன் முறையாகலானும். கிளவியாக்கத்திற்கும் பெயருக்குமிடையே வேற்றுமையிலக்கணம் உணர்த்தியதை எடுத்துக்கொண்டார்.
- வேற்றுமையாவன பெயரும் ஓரிடைச்சொல்லும் ஆகலின், அவற்றிலக்கணமும் பொதுவிலக்கணமே.

- வேற்றுமையிலக்கணம் ஒன்றாயினும், சிறப்புடைய எழுவகை வேற்றுமையும் அவற்றது மயக்கமும், விளிவேற்றுமையும் தனித்தனி உணர்த்தத் தரும் வேறுபாடு யாப்புடைமையான் மூன்றோத்தினான் உணர்த்தினார்.

விளக்கம் கூறி, பிறகு பிறர் கூறிய விளக்கத்தை எடுத்துக்காட்டி, நூற்பாவுக்கு பொருத்தமின்மையைச் சான்றுகளுடன் மறுக்கிறார்.

பொதுவிலக்கண உணர்த்திய, சிறப்பிலக்கண உணர்த்துதன் முறையாகலின், முதற்கண்ணாகிய பெயர்ச்சொற்குப் பயனிலைகோடலும், உருபேற்றலும் காலந் தோன்றாமையுமாகிய இலக்கண முணர்த்துவார் இயைபு பட்டமையான் வேற்றுமையிலக்கண முணர்த்தினாரென மேலோத்தினோடு இவ்வோத்தினுடைய இயைபு கூறினரால் உரையாசிரியரெனின் அற்றன்று, கூறி தன் கருத்தை நிறுவுகிறார்.

1. வேற்றுமையியல் பெயரிலக்கணத்தைப் பேசுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தால், முதலில் பெயரது இலக்கணத்தையும் அதன் பின்னர் வேற்றுமையது இலக்கணத்தையும் உணர்த்தி, அதன்பின்னரும் பெயரிலக்கணம் உணர்த்திப் பெயரியலை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வாறல்லாமல் அன்றி அனைத்தும் பெயர்ப் பயனிலையே(சொல்,66) "ஈறு பெயர்க் காகு மியற்கை வென்ப" (சொல்,69) என வேற்றுமை இலக்கணத்தைக் கூறி அதன் பின்னர் உருபேற்றல் பயனிலை கோடலும், பெயரின் இலக்கணம் என்பதை உய்த்துணர வைத்து. அதன் பின்னர் வேற்றுமையிலக்கணமே பேசப்பட்டுள்ளது எனவும், அதனைத் தொடர்ந்து அதன் மயக்கம் பற்றிய வேற்றுமை மயங்கியலையும், அதன் பின்னர் சிறப்பில்லாத விளிவேற்றுமையை உணர்த்தும் இயலையும் வைத்து, இவற்றை அடுத்தே பெயரியல் என்று தனியியல் வைக்கப்பட்டிருந்தால் வேற்றுமையியல் பெயரிலக்கணம் உணர்த்தும் இயலன்று என்கிறார்.

2. இத்துடன் மட்டுமன்றி பெயரியலில் அமைந்துள்ள முதல் ஐந்து சூத்திரங்களையும் முன்வையாது, அதாவது வேற்றுமையியலில் வைக்காது இடையில் வருவதாகிய பெயரியலில் வைத்ததும், பெயரியல் வேறு, வேற்றுமையியல் வேறு என்பதை உணர்த்துகிறது என்கிறார். எனவே வேற்றுமையியல் வேற்றுமையிலக்கணமே பற்றியதன்றி பெயரிலக்கணம் பற்றியதன்று என மறுத்துள்ளார்.

3. அப்படியென்றால் பெயர்நிலைக் கிளவி காலம் தோன்றா எனப் பெயர் இலக்கணத்தை வேற்றுமையியலில் வைத்ததன் காரணம் என்ன என்ற வினாவையும் எழுப்பி அதற்கு, பயனிலை கோடலும் உருபேற்றலும் பெயரிலக்கணமென்பது ஈண்டு பெறப்பட்டமையான், அவற்றோடியையக் காலந் தோன்றாமையும் ஈண்டே கூறினார். பெயரிலக்கணமாத ஒப்புமையா என்பது என விடைகூறித் தன் கருத்தை நிலைநாட்டியுள்ளார். இத்துடன் பெயரியலின் ஐந்து நூற்பாக்களின் பொதுத்தன்மையை, பொருள் வேறுபாடுபற்றிச் சிறப்பு வகையான் நான்கு சொல்லு முணர்த்துவதற்கு உபகாரமுடைய பொதுவிலக்கணமுணர்த்தி, நிறுத்தமுறையானே இனிப் பெயர்ச்சொல் உணர்த்துகின்றார் என உரைத்துத் தன் கருத்தை நிலைநாட்டியுள்ளார்.

## சேனாவரையர் மறுக்கும் இடங்கள்

"பெயரி னாகிய தொகையுமா ருளவே
யாவும் முரிய வப்பா லான" (சொல், 67)

என்னும் நூற்பாவுக்கு பெயரும், பெயரும் தொக்க தொகையுமுள; அவையுமுரிய எழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலை கோடற்கு என்றவாறு என்று விளக்கம் தருகிறார். அதற்கு உதாரணமாக, யானைக்கோடு கிடந்தது, மதிமுகம் வியர்த்தது, கொல்யானை நின்றது, கருங்குதிரை ஓடிற்று, உவாப்பதினான்கு கழிந்தன. பொற்றொடி வந்தாள் என வரும்.

பெயரின் ஆகிய தொகையுமென்னும் உம்மையால், பெயரோடு பெயர் தொக்கனவேயன்றி, நிலங்கடந்தான், மாக்கொணர்ந்தான் எனப் பெயரோடு வினை வந்து தொக்க வினையாகிய தொகையும்முள என்பதாம். ஆகவே, பெயரோடு தொழிலுந் தொக்கன தொகை என்பது பெற்றாம். அவ்வுமுரிய எனப் பொதுவகையாற் கூறினாரேனும், ஏற்புழிக் கோடல் என்பதனான் எழுவாய் வேற்றுமையாதற் கேற்புடைய பெயரின் ஆகிய தொகையே கொள்ளப்படும்.

இத்தொடர்படச் சூத்திரத்து இடர்படுவது என்னை? என்னும் வினாவினை எழுப்பிக்கொண்டு பெயரின் ஆகிய தொகையும், எழுவாய் வேற்றுமையா என்று ஓதுவது அமையாதோ எனின், அங்ஙனம் ஓதின் பெயரோடு பெயரும், பெயரோடு வினையும் தொக்கன தொகைச் சொல்லாமென்னும் தொகையிலக்கணம் பெறப்பட்டதாம். அவ்விலக்கணமுணர்த்துதற்கு இவ்வாறு பிரித்தோதினார் என்பது.

பெயரினாகிய தொகையுமென்ற வும்மையான் வினையினாகிய வினைத்தொகை தழுவப்பட்டதென்றும் எல்லாத் தொகையும் ஒருசொன்னடைய (சொல்–420) என்பதனால் தொகைச் சொல்லெல்லாம் எழுவாய் வேற்றுமையாதல் பெறப்படுதலின், ஈண்டு அவ்வுமுரிய அப்பாலன என்றது தொகைச் சொற் பயனிலை கோடல் மாத்திரம் எய்துவிதற்கு என்றும் உரையாசிரியர் கூறினார் எனில் அற்றன்று–வினைத்தொகைக்கு நிலைமொழி வினையென்பது உரையாசிரியருக்குக் கருத்தன்மை வினையின் தொகுதி காலத்தியலும்(சொல்- 415) என்னும் சூத்திரம். இனி, எல்லாத் தொகையும் ஒரு சொன்நடைய(சொல் - 420) என்பதற்கு ஒரு சொன்னடையவா என்பது அல்லது எழுவாய் வேற்றுமையா என்னும் கருத்தின்மையானும், அக்கருத்துண்டாயின் அவையும் எழுவாய் வேற்றுமையாய் நின்று அன்றி அனைத்தும் பெயர் பயனிலையே(சொல் -66) என்றதனால் பயனிலை எய்துமாகலின் அவ்வுமுரிய அப்பாலன என்றல் கூறியது கூறிற்றாமையாகலானும், அதுவும் உரையாசிரியர் கருத்தென்று என்க.

அஃதேல், தொகையும் எழுவாய் வேற்றுமையா என்பதே இச்சூத்திரத்திற்கு கருத்தாயின் எழுவாய்வேற்றுமை பெயர் தோன்றும் நிலையே(சொல் 65) என்னும் சூத்திரத்தின் பின் வைக்கவெனில் பெயர் தோன்றிய துணையாய் நிற்றலும் பயனிலைகோடலுமாகிய எழுவாய்வேற்றுமையிலக்கணம் இரண்டும் தொகை சொற்கு எய்துவித்தற்கு அவ்விரண்டு சூத்திரத்திற்கும் பின் வைத்தாரென்பது. ஆண்டு வைப்பின், அன்றி அனைத்தும் பெயர்ப்பயனிலையே என்றதனால் பயனிலை கோடல் பெயர்க்கேயாய்த் தொகைக்கு எய்தாதாம் என்பது. கண்கால் புறமகம் என்னும் நூற்பாவுக்கு இந்நூற்பாவில் கூறப்படும் சொற்கள் எல்லாம் உருபென்பர் பிற உரையாசிரியர்கள். ஆனால் சேனாவரையர் உருவின் பொருள் பட

வரும் பிறசொற்கள் என்பர். கண் முதலாயினவற்றை உருபென்பாரைச் சேனாவரையர் இரு காரணங்களால் மறுக்கிறார்.

1. இந்நூற்பாவில் கூறப்படும் கண் முதலாயின வெல்லாம் இருபனெனின், இதற்கு முன்னைய நூற்பாவிலும் கண்ணென்பது கூறப்பட்டிருத்தலின் கூறியது கூறிற்றாம். ஆதலின் இவை உருபல்ல.

2. பெயர்ச்சொற்றகள் எல்லாம் உருபேற்குங்கால் சாரியை பெறுமாயின் அச்சாரியை பெயரச்சொல்லிற்கும் வேற்றுமை உருபிற்கும் இடையிலும், அவ்வுருபு ஈற்றிலும் வரும். மகத்தாற் கொண்டான் என்புழி மகம் என்ற பெயர்ச்சொல் ஆன் என்னும் உருவினை ஏற்குங்கால், அத்துச் சாரியை பெற்றவாறும், அது இடையியல் வந்தவாறும் காண்க. ஆனால் ஊரகத்திருந்தான் ஊர்ப்புறத்திருந்தான் என வரும் எடுத்துக்காட்டுகளில் அகம் புறம் என்பன உருபாயின், அவற்றிற்குப் பின்னரும் அத்துச் சாரியை வருதற்கு காரணமில்லை எனவே இது உருபன்றாம்.

இங்ஙனம் கூறினாரேனும், இதன் கண்ணும் ஓர் ஐயம் வர அதற்கும் அழகாக அமைதி காணுகிறார் சேனாவரையர். யான், அது, தாம் என்பது அன்சாரியை பெற்று அதன் என்றும் தாம் என்பது தம் என்றும் ஆகும். ஆனால் அவை இந்நூற்பாவிற் கூறுகின்ற வேற்றுமையுருபு அல்லாத உழை, பொருட்டு உடைய என்பன வந்துழியும், உருபேற்குங்கால் ஏற்படும் புணர்ச்சி விதியையே ஏற்கின்றன. ஆதலின் இவையும் உருபேயாம் எனின், இச்சொற்கள் உருபு புணர்ச்சியின் போதுதான் இங்ஙனம் மாறவேண்டும் என்பதன்றி, ஏனைய சொற்களை ஏற்கும் பொழுதும் இம்மாறுதலைப் பெறும் ஆதலின், இது பற்றி இவைகளை உரபென்றல் கூடாதாம் என்பர்.

வினை, வினைக்குறிப்பு ஆகிய இரண்டின் காரணமாகத் தோன்றுவது எதுவோ, அதுவே பொருளாக வரும் எனக் கூறுவதற்குக் காரணம் என்னையெனில், செயப்படுபொருள் என்பது வினை, வினைக்குறிப்பு ஆகிய இரண்டின்காரணமாகத் தோன்றுதலுமாதலானும், பொதுவாகச் செயல்படு பொருளே இவ்வேற்றுமைக்குப் பொருளாம் என்று கூறிவிடின், தெரிநிலை வினையினால் வரும் செயப்படு பொருளைக் கூறினாரோ அல்லது குறிப்பு வினையினால் வரும் செயப்படுபொருளைக் கூறினாரோ என்று ஐயம் ஏற்படும் ஆதலானும், அவ்வையம் நீங்க வினை, வினைக் குறிப்பு ஆகிய இரண்டின் வாயிலாகவும் வரும் செயப்படுபொருளும் இதற்குப் பொருளாம் என ஆசிரியர் விளக்கமாகக் கூறினாராம். இந்நுடபம் எல்லாம் இவருரையில் மட்டுமே உள்ளது.

### ஒன்றாக்கல் பலவாக்கல்

இளம்பூரணர் ஒரே நூற்பாக்களாகக் கொள்பவற்றை சேனாவரையர் பிரித்துக் காட்டுகிறார். இதனை பலவாக்கல் என்று கூறலாம். வேற்றுமையியலில் இரண்டாவது வேற்றுமை முதலாக ஏழாம் வேற்றுமை வரை விளக்குகையில், இளம்பூரணர் ஒரு வேற்றுமைக்கு ஒரு சூத்திரமாகவே கொண்டுள்ளார். சேனாவரையரோ வேற்றுமை எண் அதன் உருபு, அதன் பொதுப்பொருள் ஆகியவை விளக்கும் அடிகளை ஒரு சூத்திரமாகவும் அந்த வேற்றுமை கொண்டு முடியும் சொற்களை நேரடியாகவும் பொதுமைப்படுத்தியும் கூறும் அடிகளை, மற்றொரு சூத்திரமாகவும் கொண்டு பலவாக்கல் செய்துள்ளார். அதன் மூலம் படிப்போர்

வேற்றுமையின் பொதுப்பொருள் பற்றிக் கூடுதலாகக் கவனம் படிக்கும் வாய்ப்பு ஏற்படும். அந்த பாட பேத உரையில் அது பற்றிய குறிப்பு இல்லை.

வேற்றுமை பற்றிய முதல் சூத்திரங்கள் அந்த வேற்றுமையின் உருபையும் அதன் பொதுப் பொருளைப் பொருண்மையியல் நோக்கில் கூற இரண்டாவது சூத்திரங்கள் அவை ஏற்று வரும் சொற்கள்(வினையும் பெயரும்), தொடரமைப்பு வாய்பாடு(அதனின் இயறல், அதுவாகு கிளவி) போன்றவை விளங்குகின்றன. சேனாவரையரும் எல்லா முதல் சூத்திரங்களின் கீழும் இதன் பொருள் என்றும் சில இரண்டாவது சூத்திரங்களில் உதாரணம்(3,4) என்று வேறுபடுத்தியிருப்பது குறிப்பிடத்தகுந்தது. எனவே இரண்டு தனி சூத்திரமாக அமைவது வாசகருக்குப் பெயருடன் தெளிவு ஏற்பட வழிவகுக்கும். எனவே இங்கு சேனாவரையர் வாசகர் நோக்கில் பலவாக்கல் செய்துள்ளார் என்பதை அறியமுடிகிறது. (அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சொம்மொழி மத்திய நிறுவனம் இணைந்து நடத்திய கருத்தரங்கக் கட்டுரை, 2013, பக். 33)

- வேற்றுமையியலுக்குச் சேனாவரையர் கூறியுள்ள உரை அமைப்பினைத் தொகுத்து நோக்குழி கீழ்கண்டவாறு வகைப்படுத்திக்கொள்ளமுடிகிறது.
- விளக்கம் கூறுதல்
- இதன் பொருள் என்று விளக்குதல்
- எடுத்துக்காட்டுத்தருதல்
- பாடவேறுபாட்டைச் சுட்டிக்காடல்
- பிற உரைகள் ஏற்புடையதாக இல்லாததை எடுத்துக்காட்டிச் சான்றுடன் மறுத்தல்.